மாவட்டத்திலே திருமங்கலம், போடிநாயக்கனூர், பட்டிவீரன்பட்டி ஆகிய பகுதிகளுக்குக் குடிநீர்த் திட்டங்களை நிறைவேற்ற கால தாமதம் ஆகிறது. நகராட்சிகளாக இருப்பவைகளுக்குப் பாதுகாக்கப்பட்ட குடிநீர் கொடுக்க வேண்டியது அவசியம் என்பதை அரசு உணர்ந்திருக்கிறது. பாதுகாக்கப்பட்ட குடிநீர் கொடுத்தால், நிச்சயமாக மக்களிடமிருந்து வரிமூலமாக தேவையான பணத்தை வசூலிக்க முடியும். ஆகவே, பேரூராட்சிகளின் நிதிநிலையை உயர்த்துவதற்கான சாத்தியக்கூறுகளை ஆராயுமாறு மாவட்ட ஆட்சித் தலைவர்களைக் கேட்டுக் கொள்வதை விட்டுவிட்டு, விரைவாகப் பாதுகாக்கப்பட்ட குடிநீர்த் திட்டங்களை நிறைவேற்றுவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: பேரவைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்விக்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை.

திரு. ஜே. எஸ். இராசு: சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, பேரூராட்சிகளுடைய வருமானத்தை அதிகரிப்பதற்கான வாய்ப்புகள் பற்றிய ஆய்வு கடந்த 7, 8 ஆண்டுகளாக நடந்து கொண்டிருக்கிறது. அத்தகைய வாய்ப்பு இல்லையென்று பலமுறை தெரிவிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, அமைச்சர் சொல்கிற அந்த ஆய்வின் பிரகாரம் பார்த்தால், இந்த நூற்றாண்டு நிச்சயமாக வராது என்பதை நான் மனப்பூர்வமாக அமைச்சர் அவர்களுக்குத் தங்கள் மூலம் தெரிவித்து, ஏதேனும் சிறப்புத் திட்டமாகக்கருதி, அரசின் கருத்துப்படி, 17,000 மக்கள் வாழ்கின்ற ஒரு மேஜர் பஞ்சாயத்துக்கு உதவுகின்ற வகையில், அவர் அந்தத் திட்டத்தைச் சீக்கிரமாக எடுத்துக் கொள்வாரா என்பதை நான் அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: பேரவைத் தலைவர் அவர்களே, அப்பேர்ப்பட்ட உத்தேசம் இப்பொழுது இல்லை.

கள்ளக்குறிச்சி—சின்னசேலம் குடிநீர் வழங்கு திட்டம்

*வினா எண். 152—திரு. க. ரங்கசாமி: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா

(அ) கள்ளக்குறிச்சி—சின்னசேலம் ஆகிய இரு நகரங்களிலும் குடிநீர் வழங்கும் திட்டம் அமுல்படுத்தப்பட உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: (அ) ஆம்.

(ஆ) கள்ளக்குறிச்சி—சின்னசேலம் ஆகிய இரு நகரங்களுக்கு ஒருங்கிணைந்த குடிநீர்த் திட்ட உத்தேச மதிப்பீடு முடிக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் ஒப்புதலுடன் செயற்குறிப்பு வரப்பெற்ற பின் அரசு தக்க நிர்வாக ஒப்புதல் அளிக்கும்.

[1981 பிப்ரவரி 2

[முற்பகல் 9.40]

திரு எஸ். சிவராமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலமாக ஒப்புதல் அளிக்கப்பட்டிருப்பதாகச் சொன்னார்கள். அது எப்போது வரப் பெற்றது. அதை நிறைவேற்றுவதற்கு எவ்வளவு காலம் ஆகும். சின்னசேலம், கள்ளக்குறிச்சி ஆகிய இரு நகரங்களும் வறட்சியின் காரணமாக ஒவ்வொரு ஆண்டும் பாதிக்கப்படுகின்றன. எனவே இது எப்போது முடிக்கப்படும் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: பேரவைத் தலைவர் அவர்களே, இத் திட்டம் தண்ணீர் பயன்பாடு குழுவின் ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டது. இக்குழு சமீபத்தில் தனது தொழில் நுட்ப துணைககுழுவிடமிருந்து கருத்துரைகளைக் கேட்டு அறிந்துள்ளது. சாதகமான பரிந்துரைகளை மேற்படி தொழில் நுட்பக் குழு செய்துள்ளதினால் தண்ணீர் பயன்பாடு குழுவின் ஒப்புதல் துரிதமாக எதிர்பார்க்கப்படுகிறது. அது வந்த உடன் திட்டத்திற்கான வேலைகள் துரிதமாகச் செய்யப்படும்.

திரு. எல். இளையபெருமாள்: தலைவர் அவர்களே 1978–79 ஆம் ஆண்டிலே இந்தக் குடிநீர் திட்டம் சம்பந்தமாக பரிசீலனை செய்து வேலை தொடங்குவதாகச் சொல்லி அமைச்சர் அவர்களே அந்த சமயத்தில் ஒப்புதலான வார்த்தையைக் கொடுத்தும், இவ்வளவு காலம் தாமதமானதற்குக் காரணம் என்ன? விரைவிலே என்பது எவ்வளவு காலத்திற்குள் வேலை தொடங்கப்படும்? அதிலே என்ன கஷ்டம் என்பதையாவது அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: பேரவைத் தலைவர் அவர்களே, ஆரம்பத்தில் கோமுகி அணைக்கட்டிலிருந்து சின்ன சேலத்திற்கும், மணிமுத்தார் அணைக்கட்டிலிருந்து கள்ளக் குறிச்சிக்குக் குடிநீர் வழங்க உத்தேசிக்கப்பட்டு இரண்டு திட்டங்கள் தனித்தனியான உத்தேச மதிப்பீடுகள் தயாரிக்கப் பட்டன. குடிநீர் திட்டத்திற்குத் தேவையான தண்ணீரை மேற் கண்ட அணைக்கட்டுகளில் இருந்து எடுத்துக் கொள்ளப் பொதுப் பணித் துறை தலைமைப் பொறியாளர் (நீர்ப்பாசனம்) அவர்கள் அனுமதி வழங்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டது. அவர் குடிநீர்த் திட்டத்திற்கு வழங்க கோமுகி அணைக்கட்டில் உபரியாக தண்ணீர் இல்லை என்றும், இரண்டு பேரூராட்சிகளுக்கும் சேர்த்து மொத்த மாக தண்ணீரை மணிமுத்தார் அணையில் இருந்து எடுத்துக் கொள்ளஇயலும் எனவும் அறிவித்ததால், இந்த நிலை ஏற்பட்டு மறுபரிசீலனை செய்யப்பட்டு திட்டம் வகுக்கப்பட்டது.

திரு. எஸ். சிவராமன்: தலைவரவர்களே, கள்ளக்குறிச்சிப் போன்ற நகராட்சிகளுக்கு குடிநீர் திட்டத்தை கொடுப்பதாக அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். ஆனால் பெரம்பலூர் நகராட்சிக்கு அது மறுக்கப்படுவதற்குக் காரணம் என்ன? இந்த இரண்டு நகராட்சிகளுக்கும் என்ன வித்தியாசம் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவர் கொடுக்க முடியாது என்று சொல்லவில்லை. தனிக் கேள்வி போடுங்கள்.

திருப்புவனம் அருகே வைகையிலிருந்து மதுரைக்கு குடிநீர் வழங்கல்.

* வினா எண் 153— திரு. க. பாரமலை: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) திருப்புவனம் அருகே வைகை நதியிலிருந்து ஆழ்கிணறு வெட்டி மதுரை நகருக்கு குடிதண்ணீர் வழங்கும் திட்டம் அரசின் பரிசிலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அந்தத் திட்டம் எந்த நிலையிலுள்ளது?

(இ) அந்த திட்டம் நிறைவேற்றப்பட்டால் அப்பகுதி மக்களின் விவசாயம் பெரிதும் பாதிக்கப்படும் எனத் தெரிவித்து ஆட்சேபனை மனுக்கள் பெறப்பட்டுள்ளதா?

(ஈ) ஆம் எனில், விவசாயிகளின் ஆட்சேபணை குறித்து எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: (அ) ஆம்.

(ஆ) இத்திட்ட வேலைகளுக்கு தொழில் நுட்ப ஒப்புதல் அளிக்கப்பட்டு தேவையான பொருட்கள் பெறப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

(இ) திருப்புவனம் திரு. கே. எஸ். டி. இராஜேந்திரன் என்பவரிடமிருந்து பெரிய கிணறுகள் போடப்பட்டு சக்தி மிக்க இயந்திரங்களால் அதிக நீர் உறிஞ்சப்படுவதால் மடப்புரம், திருப்புவனம், திருப்பாச்சேத்தி ஆகிய இடங்களில் கோடை காலத்தில் கிணறுகள் வறண்டு விவசாயம் பாதிக்கப்படுவதாயும், தன் தென்னந் தோப்பு பாதிக்கப்பட்டு நஷ்டம் ஏற்படும் என்று கூறியும், வேறு இடத்திற்கு திட்டத்தை மாற்றும்படி கோரியும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கு மனு வந்துள்ளது.